# திக்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

--------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான திக்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 42,300 பெறுமதியான உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 28 திகதியன்று சேகரித்திருநத ரூபா 40,543 இற்கான திக்வெல்ல பிரதேச சபையின் மக்கள் சந்தை வாடகை வருமானத்தை மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமையால் ஆண்டிற்கான வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் பில்போடப்பட்ட தொகை ரூபா 1,951,626 இனை அனுமதிப்பத்திரக் கணக்கில் இரண்டு தடவைகள் பதிவு செய்திருந்த தவறினை திருத்துவதற்காக அனுமதிப்பத்திரக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு வைத்து திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதும் 32 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் அனுமதிப்பத்திரக் கட்டண கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபை பொதுக் கணக்கு மற்றும் பாதைக் கணக்கு தொடர்பாக தயாரித்திருந்த 2014 மார்ச் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்கான காசோலைக் கட்டணங்கள் மற்றும் காசோலைகள் மதிப்பிளக்கப்பட்டமைக்கான கட்டணம் ரூபா 45,790 தொகையில் ரூபா 30,040 தொகையொன்று மீளாய்வாண்டிற்கான செலவுகள் எனவும் ரூபா 15,750 தொகையொன்று திரண்ட நிதியத்திற்கும் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாமையால் குறிப்பிட்ட செலவுக் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 61,012,920 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,408,298 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 55,604,622 ஆகும்.

1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெறவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 138,311,971 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 3,907,625 ஆகும்.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

ரூபா 52,592,601 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 627,340 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 80,589,896 ஆகும்.

2.2 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

முன்னைய ஆண்டிற்கான குறை தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 93,217,489 ஆகவும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 1,466,884 ஆக காணப்பட்டதுடன் தொடர்ச்சியாக குறை தொழிற்பாட்டு மூலதனம் காணப்பட்டமையால் தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவ பலவீனத்தன்மை ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி | 3,447 | 1,991 | 1,393 |
| வாடகை | 5,551 | 2,818 | 1,522 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 852 | 589 | 109 |
| ஏனைய வருமானம் | 41,263 | 33,508 | 127,009 |

2.3.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

---------------------------------------------------------------

(அ) நிலுவை வீதவரி

-----------------------------

(i) மீளாய்வாண்டின் போது பில்போடப்பட்டிருந்த வீதவரித் தொகை ரூபா 1,408,085 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் ரூபா 703,235 தொகையை மாத்திரமே காசாக சேகரிக்கக் கூடியதாக இருந்தமையால் சேகரிப்புக்களின் முன்னேற்றம் நூற்றிற்கு 50 ஆகும். அவ்வாறு மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த ரூபா 1,373,826 தொகையில் இருந்து ரூபா 716,429 தொகையொன்றையே அறவிடக் கூடியதாக இருந்தமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 53 ஆகும். அதன் பிரகாரம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் வருமான அதிகாரமளிக்கப்பட்டவரான சபையின் செயலாளர் நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக சட்டத்தின் 158(1)(ஈ) பிரிவின் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) நிலுவை வாடகை

----------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது நிலுவை வாடகை ரூபா 1,379,496 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவை தொகையில் ஆண்டின் போது ரூபா 494,856 தொகையொன்று கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் 2012 மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 884,646 ஆக காணப்பட்மையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 35 ஆகும்.

(இ) முத்திரைக் கட்டணம்

----------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 10,995,563 ஆகும்.

(ஈ) கடை வாடகை

--------------------------

சபைக்குச் சொந்தமான 18 கடைகளில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடை வாடகை ரூபா 974,022 தொகையினை உரிய வாடகையாளர்களின் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

-----------------------------------------------------------

பிரதேச சபையினால் 2013 ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வர்த்தக நிலையங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த பதிவேடு மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடுகள் பதிவேட்டின் பிரகாரம் 31 வர்த்தக நிலையங்களில் இருந்து ரூபா 27,500 தொகையொன்று அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------

ரதம்பல நூலகக் கட்டிடம் நிர்மாணித்தல் (நெறிமுறை அடிப்படை உதவி)

---------------------------------------------------------------------------------------------------------------

2012 ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தில் நெறிமுறை அடிப்படை உதவியின் கீழ் கிடைத்திருந்த ஏற்பாடுகளின் மூலம் ரதம்பல நூலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2012 நவம்பர் 13 ஆந் திகதி ரூபா 3,545,278 பெறுமதியான உடன்படிக்கையொன்று கையொப்பமிட்டு இரண்டாவது பகுதிக் கொடுப்பனவின் மூலம் ரூபா 2,081,910 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

இந்த நூலகக் கட்டிடம் நிர்மாணிப்பதன் மூலம் 250 பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வயது முதிர்ந்தோர்களுக்கான நலன்கள் வழங்குவதற்கான குறிக்கோள் கொண்டிருந்தது. எனினும் நிர்மாண வேலை பூர்த்தி செய்வதற்கு ஒரு வருடத்தை விட மிகையான காலம் செலவிடப்பட்டிருந்த போதும் வேலையை பூர்த்தி செய்து பொது மக்களின் நலனுக்கு வழங்கப்படாமையால் சபை இது வரை மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 2,081,910 தொகை பலனற்ற செலவொன்றாகியுள்ளது.

3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

------------------------------------------------------------------------

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது பாதீட்டு வருமானம் செலவுகளிடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.4 தீர்க்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| ஐய வினா இலக்கம் மற்றும் திகதி | விடயம் | அவதானிப்பு |
| --- | --- | --- |

| | | |
|---|---|---|
| எஸ்என்/எம்ஆர்/பீ/திக்.பி.ச/ மு.வி/2012/01(7)2012 ஜுலை 05 | இலக்கம் எல்/9440 மற்றும் எம்/7253 கொண்ட வழக்குகளுக்காக ரூபா 1,566,416 நட்டஈடு வழங்குதல் | 2012 ஜுலை 19 திகதியில் தலைவரின் பதில் கடிதத்தில் சபையின் கவனயீனம் மற்றும் திறமையின்மை காரணமாக இந்த செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டுள்ளது எனவும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 119 இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த அலுலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பொறுப்பான நபர்களை இனங்கண்டு செயற்படுதல் 2014 மே 20 திகதிய கணக்காய்வு கலந்துரையாடல் சந்தர்ப்பம் வரை நடைபெற்றிருக்கவில்லை. |
| எஸ்என்/எம்ஆர்/பீ/திக்.பி.ச/ மு.வி/2012/01(1)2012 மே 17 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ADB-2201 SRI (SF) அரங்கஹதெனிய சமன்மல்வத்த பாதையில் கொங்கிரீட் கலவையில் நிவ்டன் பெறுமானம் கிரேட் 25 ஆக இருக்க வேண்டும் எனினும் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கிரேட் 10.6 முதல் 19.9 வரை காணப்பட்டமை மற்றும் ரதம்பல உஸ்கங்கொட பாதையில் கொங்கிரீட் கலவையில் நிவ்டன் பெறுமானம் கிரேட் 25 ஆக இருக்க வேண்டும். பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கிரேட் 14.7 முதல் 23.8 வரை குறைந்த பெறுமானம் ஒன்று கொண்டிருந்தமையால் பாதையின் நிர்மாண வேலைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டமை மற்றும் உரிய நியமத்தில் காணப்படாமல் ரூபா 8,014,475 இற்கான கொடுப்பனவு செய்தல் மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 3,338,858 தொகை அறவிடப்படாமை. | பாதையின் வேலை இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடாது என சபை தீர்மானித்திருந்ததுடன் 2014 மே 20 திகதிய கணக்காய்வு கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் உரிய தரத்திற்கு மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக செலுத்தியிருந்த ரூபா 8,014,457 தொகையினை அறவீடு செய்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்